10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

127. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 14–8–1987 ஆம் நாளிட்ட 923 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

128. சிவிலியன் பிரிவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கடலோரப் பாதுகாப்பு ஊழியர்களுக்கு சிற்றுண்டி கடைத் துறையின் மூலம் விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு செலுத்தக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 11–10–1988 ஆம் நாளிட்ட 1325 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

129. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1959) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

130. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

131. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான முப்பத்தெட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

154. பெருந் தொழில்கள் பற்றிய செயல் திட்ட ஆய்வுரை, 1989–90 (தமிழ், ஆங்கிலம்).

155. 'சிப்காட்'—தமிழக தொழில் வளர்ச்சியின் அச்சாணி என்ற புத்தகம்.